# BRAMPTON Service and Information Update

## குடியிருப்புவாசிகள் மற்றும் வணிகர்கள் தாமதமாக சொத்து வரி செலுத்துவதன் காரணமாக வட்டி மற்றும் அபராத தொகை விதிப்பதை டிசம்பர் 31 ஆம் தேதி வரை நகர நிர்வாகம் ரத்து செய்து அவர்களுக்கு தனது ஆதரவுக்கரம் நீட்டுகிறது.

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 1, 2020) – நேற்றைய தினம், ப்ராம்ப்ட்டன் நகர சபையானது, தாமதமாக சொத்து வரி செலுத்துவதன் காரணமான வட்டி மற்றும் அபராத தொகை விதிப்பதை டிசம்பர் 31 ஆம் தேதி வரை ரத்து செய்வதற்கான ஒப்புதல் அளித்தது.

ஆரம்பத்தில், நகர நிர்வாகமானது வட்டி மற்றும் அபராதம் விதிப்பதை ஆகஸ்ட் 19 வரை நிறுத்தி வைத்தது. இந்த முடிவு கோவிட்-19 தொற்று பரவல் காரணமாக அதிகம் பாதிக்கப்பட்டுள்ள நமது சமூகத்தில் பலருக்கு நிதிரீதியான நிவாரணம் அளித்தது. ஆகஸ்ட் 20 முதல் டிசம்பர் 31 வரை தாமதமாக சொத்து வரி செலுத்துவதன் காரணமாக வட்டி மற்றும் அபராத தொகை விதிப்பதை ரத்து செய்வது இந்த கடினமான நேரத்தில் நமது குடியிருப்பாளர்களுக்கும் வணிகங்களுக்கும் கூடுதல் நிதி நிவாரணத்தை வழங்கும்.

தவணைக்காலம் தாண்டிய வரி பற்றிய அறிவிக்கைகள் பற்றி சொத்தின் உரிமையாளர்களுக்கு அக்டோபர் மாதத்தில் அஞ்சல் வழியாக அனுப்பப்படும்.

இன்றைய அறிவிப்பு தாமதமான வரிகளை ரத்து செய்வதாக அர்த்தம் செய்துகொள்ளக்கூடாது. வரி செலுத்துவோர் இறுதி வரி கேட்பு பட்டியலில் சுட்டிக்காட்டப்பட்ட அனைத்து வரித் தொகைகளையும் செலுத்தியாக வேண்டும்; இந்தவரி கேட்பு பட்டியல் ஜூன் மாதத்தில் வழங்கப்பட்டது . ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரையிலான காலதாமத தொகைகளுக்கு வட்டி மற்றும் அபராதங்கள் மட்டுமே ரத்து செய்யப்படுகின்றன. மேற்கொண்டு அபராதங்கள் மற்றும் வட்டி ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கு டிசம்பர் 31 க்கு முன்னர் அனைத்து வரி நிலுவைத்தொகைகளும் நகர நிர்வாகத்திற்கு செலுத்தப்பட வேண்டும். கோவிட்-19 தொற்று பரவல் காரணமாக நிதி நெருக்கடி எதையும் அனுபவிக்காத வரி செலுத்துவோர் தங்களது சொத்து வரி செலுத்துதல்களை உரிய தேதிகளுக்குள் தொடர்ந்து செய்துகொள்ளலாம்; அதற்கு அவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

வழக்கமான தவணை செலுத்த வேண்டிய இறுதி தேதிகள் செப்டம்பர் 23, அக்டோபர் 21, நவம்பர் 18, 2020 ஆகியவையாகும். கட்டணம் செலுத்துவதற்கான விருப்பத்தெரிவுகளின் விவரங்கள் நகரின் இணையதளத்தில் கிடைக்கின்றன.

முன் அங்கீகரிக்கப்பட்ட மாதாந்திர பணம் செலுத்தல்கள் (பி.டி.பி), இறுதி வரி செலுத்துவதற்கான தொகை எடுத்தல்கள் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நிகழும்.

வேறு ஏதும் விசாரணைகளுக்கு, இந்தப் படிவத்தை உபயோகிக்கவும்.

கோவிட்-19 தொற்றுப்பரவலுக்கு எதிரான ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தின் நடவடிக்கைகளைப் பற்றி அறிய வருகை தரவும்:www.brampton.ca/covid19.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca